# கிலாஃஃபத்

# அமைதி நீதி



இலண்டனில் நடைபெற்ற 11 -வது தேசிய அமைதிக் கருத்தரங்கில்
உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீ.ஃ.பத்துல் மஸீஹ்
**ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது** (அய்யதஹுல்லாஹு தஆலா
பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் சிறப்புரை






# அறிமுகம்

8 நவம்பர் 2014 அன்று, இலண்டனில் நடைபெற்ற 11 –வது தேசிய அமைதிக் கருத்தரங்கில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்) அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். அன்னாரது உரையின்போது அவர்கள் ISIS மற்றும் பிற பயங்கரவாத பிரிவினரின் செயல்பாடுகளை வன்மையாகக் கண்டித்ததுடன், அவை ‘‘இஸ்லாத்திற்கு முற்றிலும் அப்பாற்பட்டவை’’ என்றும் அவர்கள் தமது ‘‘தீய சூழ்ச்சிகளின் மூலம் தீவிரவாதத்தின் ஓர் அமைப்பை (நெட்வொர்கை) பரப்புகிறார்கள்’’ என்றும் குறிப்பிட்டார்கள். திருக்குர்ஆனிலிருந்து ஏராளமான மேற்கோள்களைச் சுட்டிக் காட்டி, இஸ்லாம் அமைதியின் மார்க்கம் என்றும், அது சகிப்புத்தன்மையையும், பரஸ்பர புரிதலையும், சமுதாயத்தில் அனைத்து தரப்பினருக்கும் வழங்க அறிவுறுத்துகிறது என்றும் நிரூபித்துள்ளார்கள். அன்னார் ISIS போன்ற பயங்கரவாத பிரிவினருக்கு எவ்வாறு நிதியும், ஆதரவும் கிடைத்து வருகிறது என்ற வினாவையும் எழுப்பினார்கள். இந்நிகழ்ச்சியானது, இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் முன்னிலையில் நடந்தது. இதில் கலந்து கொண்ட ஐநூறுக்கும் அதிகமான அஹ்மதி அல்லாத விருந்தினர்களில், அமைச்சர்கள், அரசுத் தூதுவர்கள், பாராளுமன்ற இரு அவை உறுப்பினர்கள் மற்றும் பல விருந்தினர்கள், சான்றோர்கள் ஆகியோர் அடங்குவர். ‘‘கிலாஃபத், அமைதி மற்றும் நீதி’’ என்பதே இவ்வருட அமைதிக் கருத்தரங்கின் கருப்பொருளாகும். இந்நிகழ்ச்சியின்போது, யூ.கே –வின் மேரி மில்ஸ் என்ற அமைப்பின் CEO மதிப்பிற்குரிய மேக்ஃபர்லேன் பாரோ அவர்கள் அமைதியை நிலைநாட்ட பாடுபட்டமைக்காக, ஹுஸூர் அவர்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இவ்வருட அமைதிப் பரிசை அன்னாருக்கு வழங்கினார்கள். இவர், வளர்ந்து வரும் நாடுகளில் குழந்தைகளுக்கு உணவு மற்றும் கல்வி கிடைப்பதற்காக சிறப்பான முயற்சியை மேற்கொண்டார். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவுக்கு முன், பல்வேறு விருந்தினர்கள் சிற்றுரை நிகழ்த்தினார்கள். அவர்களுள் சிலர்: இங்கிலாந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தேசிய தலைவர் மதிப்பிற்குரிய ரஃபீக் ஹயாத், சமுதாயங்களுக்கான அமைச்சர் விம்பிள்டன் லார்டு தாரிக் அஹ்மது, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அனைத்து கட்சி பாராளுமன்ற குழுவின் தலைவர் சோபன் மெக்டெனொ எம்.பி., எரி சக்தி மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அரசுச் செயலர் மாண்புமிகு எட்வர்டு டேவி எம்.பி., சர்வதேச மேம்பாட்டிற்கான அரசுச் செயலர் மாண்புமிகு ஜஸ்டின் கிரீனிங் எம்.பி., மற்றும் வாடிகனிலிருந்து அனுப்பப்பட்டிருந்த சிறப்பு தூதுச் செய்தியை வாசித்தவரும் சவுத் வார்க்கின் ஓய்வு பெற்ற ஆர்ச் பிஷப்பும் ஆகிய கண்ணியத்திற்குரிய கெவின் மெக்டோனெல்ட்...

# 11 –வது அமைதிக் கருத்தரங்கில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்களின் சிறப்புரை

தஷஹ்ஹுது தஅவ்வுது மற்றும் பிஸ்மில்லாஹ் ஓதிய பிறகு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் கூறினார்கள்:

கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ. அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் அனைவரின் மீதும் உண்டாவதாக!

இவ்வருடத்தின் அமைதிக் கருத்தரங்கில் கலந்து கொள்ள இங்கு வருகை புரிந்திருக்கும் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களில் பெரும்பாலார் அறிந்திருப்பது போன்று, கடந்த 10 ஆண்டு காலமாக இக்கருத்தரங்கம் வருடந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் காலண்டரில் இது ஒரு நிரந்தர அங்கமாக ஆகியுள்ளது. வழக்கமாக நிகழ்ச்சியை மார்ச் மாதம் நடத்துகின்றோம். ஆனால், பலதரப்பட்ட காரணங்களினால் இவ்வருடம் இந்நிகழ்ச்சி நவம்பர் வரையிலும் காலதாமதமாகியுள்ளது. இன்றிரவு தேசிய நினைவு தின விழாவும் நடைபெறவிருக்கிறது. அதன் காரணமாக, நாம் அழைத்திருந்த மக்கள் சிலர் இப்போது கலந்து கொள்ள இயலாத நிலை இருக்கலாம்.

எப்படி இருந்தபோதிலும், இங்கு வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஒரு குறிப்பிட்ட



முஸ்லிம் பிரிவின் கண்ணோட்டத்தில், நீங்கள் அமைதியைக் குறித்து செவியேற்க விரும்புகிறீர்கள் என்பதை நிச்சயமாக தங்களுடைய பங்களிப்பு நிரூபிக்கின்றது. ஏனெனில் இன்றைய உலகில், உலக அமைதி பற்றியும் உலகம் முழுவதும் எழுந்துள்ள சர்ச்சைகள் பற்றியும் மிக அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது.

நிச்சயமாக உலகின் தற்போதைய சூழல், உலகின் பெரும்பாலான பகுதிகளில் அச்சமும் கவலையும் உருவாகக் காரணமாகியுள்ளது. இது மிகவும் வருந்தத்தக்க நிலை என்றாலும், இன்று உலகில் நாம் காணுகின்ற குழப்பங்களில் அதிகமானவை, சில குறிப்பிட்ட பெயர் தாங்கி முஸ்லிம்களின் செயல்களின் காரணமாகவே உருவாகின்றன என்பதை ஒப்புக் கொள்வதில் எனக்கு எவ்வித தயக்கமுமில்லை. தன்னுடைய மத நம்பிக்கையை நன்கு விளங்கிக் கொண்ட, அமைதியை நாடுகின்ற எந்தவொரு முஸ்லிமுக்கும் பெரும் கவலையும் ஏமாற்றமும் ஏற்படுத்த இது காரணமாகிறது. கடந்த ஆண்டுகளில், ஒரு குறிப்பிட்ட அமைப்பு தனது தீவிரவாதத்தின் வலையமைப்பை சூட்சமமாக பரப்பியுள்ளதன் மூலம், உலகம் முழுவதும் பெரும் கவலை மேலோங்கக் காரணமாகியுள்ளது. ISIS அல்லது IS என்று பொதுவாக அறியப்படும் பயங்கரவாத அமைப்பைப் பற்றித்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

இந்த தீவிரவாத அமைப்பின் செயல்பாடுகள் முஸ்லிம் நாடுகளில் மட்டும் அதன் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஐரோப்பாவில் உள்ள நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இன்னும் தொலை தூர நாடுகளும், இதனுடைய மிருகத்தனத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. நாம் ஐரோப்பாவிலும், உலகின் பிற பகுதிகளிலும் இதனால் பாதிக்கப் பட்டுள்ள ஏராளமான முஸ்லிம் இளைஞர்களைப் பார்க்கின்றோம். அவர்கள், இஸ்லாத்தின் உண்மையான



உருவத்தை ISIS தான் முன்னிறுத்துகின்றது என்று நம்பி வருவதோடு அவர்களின் கொள்கைகளையும் ஆதரிக்கின்றனர். இதன் காரணமாகவே, இளைஞர்கள் ISIS –க்கு உதவி செய்யவும், அவர்களுக்கு ஆதரவாக போரிடவும் கூட மன உறுதி கொண்டுள்ளனர்.

இங்கு யூ.கே –விலிருந்து சுமார் 500 பேர் ISIS –க்கு ஆதரவாக போரிட, ஏற்கனவே சிரியா மற்றும் ஈராக்கிற்கு பயணம் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவர்களுள் பெரும்பாலார் முஸ்லிம் இளைஞர்கள் ஆவர். இது, இஸ்லாத்தின் பெயரால் போரிடப்படுகிறது என்று இந்த தீவிரவாத அமைப்பு பொய்யாகக் கூறிக் கொண்டிருக்கும் ஒரு போராகும். இவ்வாறு ஜிஹாது என்ற பெயரில் பயணித்துள்ள ஐரோப்பிய முஸ்லிம்களின் எண்ணிக்கையை நாம் உற்று நோக்கினால், யூ.கே –விலிருந்து ஈராக் மற்றும் சிரியாவுக்கு சென்று கொண்டிருக்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கையின் விகிதமானது, ஜெர்மனி அல்லது இதர ஐரோப்பிய நாடுகளிலிருந்து சென்று கொண்டிருக்கும் நபர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும்.

இது பிரிட்டனுக்கு மிகவும் அபாயகரமான விஷயமும் மிகவும் கவலையைத் தரும் விஷயமுமாகும். ஏனெனில், ISIS மற்றும் அவர்களுடைய கலீஃபா என கூறிக் கொள்பவரின் செயல் திட்டங்களும் நோக்கங் களும் மிகவும் பயரங்கரமானதாகவும் காட்டு மிராண்டித்தனமானதாகவும் இருக்கின்றன.




உலகை பழிவாங்கவும் எல்லைகள் மற்றும் நாடுகளைப் கைப்பற்றவும் விரும்புவதாக அவர்களது கலீஃபா கூறுவதாக கூறப்படுகிறது. முழு உலகிற்கும் முஸ்லிம்களை எஜமானர் களாக்கி, முஸ்லிம் அல்லாதவர்களை அடிமை களாக அல்லது அவர்களை முஸ்லிம்களின் சொத்தாக ஆக்குவதற்கு, தான் விரும்புவ தாகவும் அவர் கூறி வருகிறார். ஒரு முஸ்லிமை எந்த விதத்திலும் எதிர்க்கும் ஒவ்வொரு நபருக்கும் எதிராக தண்டனை கொடுக்கப்படும் என்றும், ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நபரின் மீதும் ஷரீ அத் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அவர் கூறுகிறார்.

மற்ற மார்க்கங்கள் அல்லது பிரிவுகளைச் சார்ந்த பெண்களின் உரிமைகளைப் பறிக்கவும், அவர்களை ஒடுக்கவும், அவர்களை வைப்பாட்டி களாக்கவும் அல்லது அவர்களை நிர்பந்தப்படுத்தி தமது மனைவிகளாக்கவும்

அவர்கள் ஆசை கொண்டுள்ளனர். ISIS தனது நம்பிக்கையிலிருந்து மாறுபடும் ஒவ்வொரு பிற மார்க்கத்தையும் அல்லது பிரிவையும் அழிக்க நினைக்கிறது. மேலும் தற்போதைய முஸ்லிம் அரசுகளை நீக்கி விட்டு, அவர்களிடமிருந்து அதிகாரத்தை கைப்பற்ற விரும்புகிறது. இவ்வாறு, இவையனைத்தும் உண்மையென்றால், அவர்களின் வியூகமும் நோக்கமும் பரந்து விரிந்த ஒன்றாக இருக்கும். மேலும் அவர்களது அடிப்படைக் குறிக்கோள் உலகில் அமைதியை சீர்குலைப்பதேயாகும்.

ISIS அல்லது வேறு ஏதாவது பயங்கரவாத அமைப்பு, உலகைக் கைப்பற்றுவதில் இறுதியாக வெற்றி கொள்ளும் என்று எண்ணுவது முற்றிலும் மடமையாகும். ஏனென்றால் அவர்களது திட்டங்கள் அனைத்தும் முற்றிலும் அறிவற்றதும், யதார்த்தத்திற்கு மாற்றமான பேராசை பிடித்த எண்ணத்தின் அடிப்படையிலும் அமைந்ததாகும் என்பது தெளிவான ஒன்றாகும். எனினும் அவர்களின் பாதையிலிருந்து அவர்கள் தடுக்கப்படாவிட்டால், அவர்கள் தமக்குத் தாமே அழிவைத் தேடிக் கொள்வதற்கு முன் உலகிற்கு பேரிழப்பையும் அழிவையும் ஏற்படுத்தக் கூடும்.

எந்தவொரு ஆதரவும், ஒத்துழைப்புமற்ற தனிமனிதர்கள் கூட உலகில் அச்சுறுத்தலையும் அழிவையும் ஏற்படுத்த முடியும் என்பதை பல சம்பவங்கள் மூலம் நாம் கண்டுள்ளோம். உதாரணமாக, அமெரிக்காவின் கல்விக் கூடங்களில் ஒவ்வொரு சில மாத இடைவெளியிலும் மற்றுமோர் துப்பாக்கிச் சூடு நிகழும் கோர சம்பவம் நடைபெறும் செய்திகள் வெளிவருகின்றன. இவ்வாறு ஒரு தனிப்பட்ட நபரின் கொடுஞ் செயலால் கணிசமான அப்பாவி குழந்தைகள் கொன்று குவிக்கப் படுகின்றனர். இவ்வாறிருக்க, ஏமாற்றத் திற்கும் நிம்மதியின்மைக்கும் உள்ளாகி, இது போன்ற அக்கிரமமான காரியத் திற்காக தமது வாழ்வைத் துறக்கவும் தயாராக இருப்பவர்களை உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஒன்று திரட்டுகின்ற ஒரு தீவிரவாத அமைப்பால் எந்த அளவுக்கு அதிக துன்பத்தையும் அழிவையும் ஏற்படுத்த முடியும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.



Permission to fight is given to those against whom war is made, because they have been wronged — and Allah indeed has power to help them — Those who have been driven out from their homes unjustly only because they said, 'Our Lord is Allah' — And if Allah did not repel some men by means of others, there would surely have been pulled down cloisters and churches and synagogues and mosques, wherein the name of Allah is oft commemorated. And Allah will surely help one who helps Him. Allah is indeed Powerful, Mighty — *(Al-Hajj: 40,41)*

மேலும் சுயவிருப்பத்துடன் சேர்ந்துள்ள தனிநபர்களை மட்டுமல்லாமல் அதிநவீன ஆயுதங்கள் மற்றும் பீரங்கிப் படைகள் ஆகியவற்றையும் இந்த அமைப்பு பெருமளவு பெற்றிருப்பதால் இந்த கருத்து இன்னும் உண்மையாகி விடுகிறது. இவர்கள் இறுதியாக அணு ஆயுதத்தின் மீதும் தமது கையை வைக்கக் கூடும் என்பதும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றல்ல. நான் கூறியது போன்று, இத்தகைய வழிதவறிய அமைப்புகளால் நிரந்தரமான அல்லது நீடித்து நிலைத்திருக்கக் கூடிய வெற்றியை அடைந்து விட முடியாது எனினும், குறுகிய காலத்தில், குறிப்பிட்ட நிலப்பரப்புகளை தமது வலிமையினால் இவர்கள் கைப்பற்றவும் பெருமளவில் அழிவை உண்டாக்கவும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இவ்வனைத்தையும் கருத்தில் கொள்ளும்போது, ISIS மற்றும் இதுபோன்ற கொள்கைகளைக் கொண்டுள்ள மற்ற அமைப்புகளினால் உலகம் ஒரு பயங்கரமான அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இஸ்லாத்தின் பெயரால் செய்யப்படும் இவ்வனைத்து செயல்பாடுகளும், உண்மையான மற்றும் அமைதியை விரும்பும் அனைத்து முஸ்லிம்களுக்கும் மிகுந்த வேதனையையும் துயரத்தையும் தருகின்றன. ஏனென்றால், இப்படிப்பட்ட மனிதநேயமற்ற, மூர்க்கத்தனமான கொள்கைகளுக்கு மார்க்கத்தில் எவ்வித இடமுமில்லை. மாறாக, ஒவ்வொரு பாதையிலும் ஒவ்வொரு படியிலும் அனைத்து மக்களுக்கும் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாகவே இஸ்லாத்தின் போதனைகள் அமைந்துள்ளன. திருக்குர்ஆனையும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்வையும் அன்னாரது பண்புகளையும் நாம் உற்று நோக்கினால், ஆரம்ப கால முஸ்லிம்கள் எவ்வித போரையோ அல்லது வன்முறைச் செயலையோ ஒருபோதும் செய்ய முன் வந்ததில்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிய வரும். முஸ்லிம்கள் எப்போதாவது போரில் பங்கெடுத்திருந்தால், அது கண்டிப்பாக தற்காப்புக்காகவே ஆகும். அவர்களுடைய ஒரே குறிக்கோள் அடக்குமுறையாளர்களின் கொடுமைகளை நிறுத்துவதாக மட்டுமே இருந்தது. தம்முடைய சொந்த ஆதிக்கத்தை நிலைநாட்டவோ அல்லது அநீதி இழைப்பதற்காகவோ ஒருபோதும் இருந்ததில்லை. அவர்கள் நிலப்பரப்புகளை அல்லது நாடுகளை ஆக்கிரமிப்பு செய்யவோ, மக்களை அடிமைப்படுத்தவோ ஒருபோதும் முயன்றதில்லை. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், தமது நபித்துவத்தின் ஆரம்ப காலக்கட்டத்தில் தமது சொந்த ஊராகிய மக்கா நகரில் இருந்தபொழுது, அன்பு மற்றும் நேசத்தின் மூலமாக எப்போதும் இஸ்லாத்தின் போதனைகளை பரப்பி வந்தார்கள் என்பதற்கு அன்னாரது வாழ்க்கை வரலாறு சாட்சி பகர்கின்றது. ஆயினும், மக்கத்து மக்கள் அன்னாரை புறக்கணிப்பு

மட்டும் செய்யவில்லை. மாறாக, அன்னாருடன் கொடூரமாகவும், இரக்கமற்ற முறையிலும் நடந்து கொண்டனர். அவர்களும் அன்னாரைப் பின்பற்றியவர்களும் எந்த அளவுக்கு மிருகத்தனமான முறையில் சித்ரவதை செய்யப்பட்டனர் என்றால், இறைக் கட்டளைக்கிணங்க, அவர்கள் மக்காவை விட்டும் வெளியேறி மதீனா நகருக்குள் குடியேறும் நிலை ஏற்பட்டது. இடம் பெயர்ந்த பிறகும் கூட, மக்காவினர் முஸ்லிம்களை சுதந்திரமாக வாழ விடவில்லை. மாறாக, முழுமையான ஆயுதங்களுடன் படைகளைத் திரட்டி பயணம் செய்து முஸ்லிம்களுக்கெதிராகப் போரிடத் துவங்கினர். அப்போதுதான், அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க, முஸ்லிம்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ளும் விதமாக போரை எதிர்கொள்ள முதன் முறையாக அனுமதி வழங்கப்பட்டனர்.

இந்த அனுமதி வழங்கப்பட்டதற்கான காரணம் குறித்து, திருக்குர்ஆனில் அதிகாரம் 22 வசனம் 40–41 –ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தற்காப்புப் போருக்கான அனுமதி வழங்கப்பட்டது. ஏனெனில், முஸ்லிம்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ளாவிட்டால், முழு உலக அமைதியும் ஆபத்திற்குள்ளாகி விடும் என்று அல்லாஹ் இவ்வசனத்தில் கூறியுள்ளான். எதிரிகள் இஸ்லாத்தை மட்டும் முற்றாக அழித்து விட விரும்ப வில்லை. மார்க்கத்தின் எல்லாவித பரிமாணங்களையும் இவ்வுலகிலிருந்து நீக்கி விட விரும்பினர் என்பதுவே உண்மை. எனவேதான், போரிட அனுமதி வழங்கப்படாவிட்டால், கிறிஸ்தவ பேராலயங்கள், யூத மத ஆலயங்கள், கோவில்கள் மற்றும் மசூதிகள் அல்லது இறைவழிபாட்டிற்கான பிற இடங்கள் என எதுவுமே பாதுகாப்பாக இருந்திருக்காது என்று திருக்குர்ஆன் கூறுகிறது. எனவே, மேலே கூறப்பட்ட வசனத்தின் அடிப்படையில் இஸ்லாத்தைப் பாது காப்பதற்கு மட்டுமல்ல; அனைத்து மார்க்கங்களையும் பாதுகாப்பதற்காகவே, முஸ்லிம்கள் அவர்களை எதிர்த்து போரிட அனுமதி வழங்கப்பட்டனர்.

இதிலிருந்து முஸ்லிம் அல்லாதவர்களை கொலை செய்வதும், அவர்களது நிலங்களை அபகரிப்பு செய்வதும், அவர்களை அடிமைப் படுத்துவதும் அனுமதிக்கப்படுகிறது என்று கூறும் இன்றைய பெயர் தாங்கிய முஸ்லிம்கள் எவ்வளவு மாபெரும் தவறில் இருக்கிறார்கள் என்பதை நீங்களே விளங்கிக் கொள்ள முடியும். உண்மை என்னவெனில், ஒவ்வொரு தனி மனிதரும் முழு உரிமையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கு, அவர்களின் உரிமைக்கு உத்திரவாதமளிக்கும் ஒரு மார்க்கமே இஸ்லாம் ஆகும். மேலும், மத நம்பிக்கை யையும் பின்னணியையும் பாராமல், ஒவ்வொரு மனிதரும் அமைதியோடும் ஒற்றுமையோடும் வாழ அவர்களின் உரிமைக்கு உத்திரவாதமளிக்கும் ஒரு மார்க்கமே இஸ்லாம் ஆகும்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தம்மைப் பின்பற்றியவர்களுடன் எவ்வாறு மதீனாவுக்கு குடிபெயர்ந்தார்கள் என்பதை முன்னதாகக் குறிப்பிட்டேன். முஸ்லிம்கள் தம்மை அச்சமூகத்தோடு இணைத்துக் கொண்ட விதமானது, அந்நிய நாட்டில் குடியேறுபவர்கள் புதிய சமயத்தோடு எவ்வாறு ஒன்றுபட வேண்டும் என்பதற்கு ஒரு மிகச் சிறந்த முன்னுதாரணமாகும். முஸ்லிம்கள் மதீனா நகருக்கு வருவதற்கு முன்னர், அந்நகரில் யூதர்கள் மற்றும் அரேபியர்கள் ஆகிய இரு முக்கிய பிரிவினர்கள் வசித்து வந்தனர்.

முஸ்லிம்களின் வருகையால், முஸ்லிம்கள், யூதர்கள், முஸ்லிம் அல்லாத அரேபியர்கள் என்று மூன்று பிரிவினர் உருவாயினர். அப்போது, அவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் அமைதியுடனும் ஒன்றிணைந்து வாழ்வதன் அவசியத்தை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் உடனடியாக குறிப்பிட்டார்கள். மேலும் அன்னார் அவர்களுக்கிடையில் ஓர் ஒப்பந்தமும் செய்து வைத்தார்கள். அந்த உடன்படிக்கையின்படி, ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொரு இனத்தவருக்கும் அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட்டன. அனைத்து தரப்பினருடைய வாழ்வுக்கும் செல்வத்திற்கும் உத்திரவாதம் அளிக்கப்பட்டது. முன்னர் கடைபிடித்து வந்த அவர்களுடைய இனப்பழக்கங்களுக்கு மதிப்பளிக்கப்பட்டது. தீங்கையும், குழப்பத்தையும் உருவாக்கும் நோக்கத்தில் எவராவது மக்காவிலிருந்து இங்கு வந்தால், அவருக்கு மதீனாவில் யாரும் தஞ்சம் அளிக்கக் கூடாது. மேலும், முஸ்லிம்கள் மதீனாவிற்கு வெளியே தாக்கப்பட்டால் அல்லது போரிட நேர்ந்தால், முஸ்லிம் அல்லாதவர்களை முஸ்லிம்களுடன் இணைந்து போரிட நிர்ப்பந்திக்கக் கூடாது என்ற விதிமுறை வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும், ஒரு பொது எதிரி மதீனாவைத் தாக்கினால், மூன்று பிரிவினர்களும் ஒரே குழுவாக ஒன்றிணைந்து நின்று நகரத்தைப் பாதுகாக்க வேண்டும். மேலும், மற்ற பிரிவினர்களுடன் யூதர்கள் செய்த உடன்படிக்கையை முஸ்லிம்கள் கண்ணியத்துடன் பேணுவர். யூதர்கள் அவர்களது மார்க்கத்தைப் பின்பற்றி வாழ்ந்து வருவர். முஸ்லிம்கள் தமது மார்க்கத்தைப் பின்பற்றி வாழ்ந்து வருவர்.

இம்மூன்று பிரிவினர்களும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட பொழுது, மதீனா நகரின் தலைவராக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் செயல்படுவார்கள் என இம்மூன்று பிரிவினரும் ஒருமித்த சம்மதத்துடன் ஒப்புக் கொண்டனர். இருப்பினும், நான் முன்னர் கூறியது போன்று யூதர்கள் ஷரீஅத் சட்டத்தைப் பின்பற்ற மாட்டார்கள். மாறாக, யூத மத சட்டத்தையும் நடைமுறைகளையுமே பின்பற்றுவர். இதுதான், இஸ்லாத்தின் தூய ஸ்தாபகர், சகிப்புத்தன்மைக்கும் பரஸ்பரம் மதிப்பளித்தலுக்கும் காட்டிய மிகச் சிறந்த

எடுத்துக்காட்டாகும். உண்மை இவ்வாறிருக்க, இன்று ஒருவர் எந்த மார்க்கத்தை அல்லது பின்னணியை உடையவராக இருப்பினும், ஒவ்வொரு மனிதன் மீதும் ஷரீஅத் சட்டம் திணிக்கப்பட வேண்டும் என்று ISIS கூறி வருகிறது. அந்நாட்களில், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அந்த உடன்படிக்கையில் பெண்களின் உரிமைகளையும் வரையறுத்தார்கள். அது தெளிவாகக் குறிப்பிடுவது என்னவென்றால், எந்தவொரு பெண்ணும் தனது வீட்டிலிருந்தோ அல்லது அவளது விருப்பத்திற்கு மாறாக பலவந்தமாகவோ வெளியேற்றப்படக் கூடாது. எனவே, முஸ்லிம் அல்லாத பெண்கள், தமது உடைமைகளாக்கப்படுவர் என்று ISIS அமைப்பு எவ்வாறு கூற முடியும்? அந்த உடன்படிக்கைக்கிணங்க, எந்தவொரு மனிதனையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி நிர்பந்தப்படுத்தக் கூடாது. மாறாக, யூதர்களும் மதீனாவாழ் மக்களும் அன்புடனும் அனுதாபத்துடனும் சகோதரர்களைப் போன்று முஸ்லிம்களால் நடத்தப்படுவர் என்று மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இதுதான் முஸ்லிம்களின் வருகையைத் தொடர்ந்து மதீனாவின் சமுதாய அமைப்பை ஒன்றிணைத்த அந்த உடன்படிக்கையின் சுருக்கமாகும்.

இந்த ஒப்பந்தத்தை முஸ்லிம்கள் சொல்லுக்கு சொல் பின்பற்றி வந்தனர் என்ற உண்மைக்கு வரலாறு சான்று பகர்கின்றது. எப்பொழுதாவது உடன்படிக்கை மீறப்பட்டிருந்தால், அது மற்ற பிரிவினர்களின் காரணமாகவே யாகும். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மதீனாவின் தலைவர் என்ற முறையில், சில நேரங்களில் உடன்படிக்கையை முறித்துவிட்ட அல்லது குற்றங்களில் ஈடுபட்ட தனிநபர்கள் அல்லது குழுக்களோடு பரிமாற வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட சமயங்களில் அநீதிக்கு அறவே இடமளிக்காமல், உடன்படிக்கையின் விதிகளுக்கேற்ப நியாயமான முறையில் தண்டனைகள் வழங்கப்பட்டன. இதுவே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அடித்தளமிட்ட இஸ்லாமிய அரசின் உண்மையான தோற்றமாகும். அன்னாரைத் தொடர்ந்து, நேர்வழி காட்டப்பட்ட நான்கு கலீஃபாக்கள் அத்தகைய ஆட்சியைத் தொடர்ந்தனர். இஸ்லாத்தின் முதல் நூற்றாண்டு முழுவதும் இத்தகைய ஆட்சியே நீடித்தது.

எனவே, இன்று உண்மையான நீதியின் இத்தகைய தத்துவங்களுக்கு எதிராக ISIS அமைப்போ அல்லது ஏதாவது ஒரு முஸ்லிம் அரசோ செயல்பட்டாலும், அவர்கள் அவ்வாறு செயல்படக் காரணம் அவர்கள் தம்முடைய சுயநலன்களையும் மற்றும் அரசியல் ஆதாயங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கேயாகும்.

இஸ்லாத்தின் பெயரால் செயல்படுவதாக அவர்கள் வாதிட்டாலும், உண்மை என்னவென்றால், அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு இஸ்லாத்துடனோ தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளுடனோ எவ்வித தொடர்பும் இல்லை.

ரஸூல் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னுள்ள அரேபிய வரலாற்றை நாம் பார்ப்போமேயானால், ஒவ்வொரு கோத்திரத்தினரும் இரத்தம் சிந்துதல் மற்றும் யுத்தம் மூலமாகவே தமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்பவர்களாக இருந்து வந்தனர். இப்படிப்பட்ட நிலை இருந்தபோதிலும், அதே சமுதாயத்தில்தான், அனைத்துப் பிரிவுகள் மற்றும் கோத்திரங்களுடனும் அவர்கள் பின்பற்றும் நடைமுறைகளுக்கும் மத நம்பிக்கைகளுக்கும் ஏற்ப நடந்து கொள்ளும் வகையில், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் நீதிக்கான ஒழுங்கு முறையை உருவாக்கினார்கள். இதன் மூலம் அவர்கள் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தினார்கள். ஒருவர் இஸ்லாத்தின் ஆரம்பகால வரலாற்றை நியாயமாகவும் பாரபட்சமின்றியும் படிப்பாரேயானால், அவர் ரஸூல் (ஸல்) அவர்களின் மற்றும் அன்னாரைப் பின்பற்றி வந்த, நேர்வழி காட்டப்பட்ட நான்கு கலீஃபாக்களின் ஆரம்ப காலக்கட்டத்தில் முஸ்லிம்களின் ஒழுக்க முறைகள் மிகவும் உயர் தரத்தில் இருந்தது என்பதை நன்கு விளங்கிக் கொள்வர்.

அவர்கள் எந்தவொரு போரிலும் ஆக்கிரமிப்பாளராக இருந்ததில்லை. அவர்கள், ஒருபோதும் நாடுகளை கைப்பற்ற முனைந்ததும் இல்லை. இஸ்லாத்தின் போதனைகளை அவர்கள் பரப்ப நாடிய இடங்களிளெல்லாம் முற்றிலும் அமைதியான முறையில் அதை செய்து வந்தார்கள். உதாரணமாக, இஸ்லாம் சீனாவிலும் தென் இந்தியாவிலும் பரவியதெனினும், இஸ்லாமிய படைகள் அந்த தேசங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக வரலாற்றில் எங்கும் பதிவாகவில்லை. மாறாக, அத்தகைய நாடுகளிலும் மற்ற தேசங்களிலும் அமைதியின் வழிமுறைகள் மூலமே இஸ்லாம் பரவியது. பிற்காலத்தில், சில முஸ்லிம் மன்னர்கள் பல்வேறு காரணங்களுக்காக போர் புரிந்தனர். எனினும், அதற்கு அவர்களை மட்டுமே குற்றம் சுமத்த முடியாது. அத்தகைய போர்களிலும் கூட கைப்பற்றப்பட்ட நாடுகளின் மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஒருபோதும் நிர்பந்திக்கப்படவில்லை. நிச்சயமாக, அத்தகைய நடவடிக்கைகளை முற்றிலும் தவிர்த்து இஸ்லாத்தை அமைதியான முறையில் பரப்புமாறு மட்டுமே கூறப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே கூறியது போன்று தற்காப்பு மார்க்கப் போர்களுக்கு அல்லாஹ் அனுமதி வழங்கியது இஸ்லாத்தை மட்டுமல்லாது அனைத்து மதங்களையும் பாதுகாப்பதற்கான ஒரு வழிமுறையாகவே இருந்தது. திருக்குர்ஆனில், பல்வேறு வசனங்களில் அல்லாஹ் போர்களுக்கான பல்வேறு விதிமுறைகளை வரையறுத்துள்ளான்.

உதாரணமாக, அதிகாரம் 2 வசனம் 191 –ல் அல்லாஹ் தற்காப்பு போர் பற்றிய விதிமுறையை ஏற்படுத்தியுள்ளான். அதில், போர் புரிவோருக்கு எதிராக மட்டுமே போரிட வேண்டும். வரம்பு மீறக் கூடாது. கொடூரமாக நடந்து கொள்ளக் கூடாது. எனெனில் அநீதியாளர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

மேலும் அதிகாரம் 16 வசனம் 127 –ல் போரின் போது, வரம்பு மீறவோ அத்துமீறியோ நடந்து கொள்ளக் கூடாது என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான். உங்களுக்கு அநீதியிழைத்தவருக்கு, அந்த அநீதியின் அளவிற்கேற்பவே தண்டனை இருக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

அதிகாரம் 2 வசனம் 194 –ல் எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்: துன்பங்கள் நிறுத்தப்பட்டு மார்க்க நம்பிக்கைகள் சுதந்திரமாகப் பின்பற்ற அனுமதிக்கப்படும் வரையில் மட்டுமே போரிட வேண்டும். கொடுமை இழைப்பவர்கள் தவிர்ந்து கொண்டாலோ, குழப்பம் முடிவுக்கு வந்து விட்டாலோ அவர்களுக்கெதிராக மேற்கொண்டு எவ்வித விரோதமும் காட்டக் கூடாது.

8 –வது அதிகாரம் 62 –வது வசனத்தில் அடக்குமுறையாளர்கள் அமைதியை நோக்கி இறங்கி வந்து, சமாதானத்திற்காக கையை நீட்டினால், முஸ்லிம்கள் அதைப் பற்றிப் பிடிக்க வேண்டும். அவர்களின் நேர்மை குறித்து வினவக் கூடாது.

மேலும் 9 –வது அதிகாரம் 4 –வது வசனத்தில், இணை வைப்பவர்கள் வரம்பு மீறிச் செயல்படாமலும், பரஸ்பர உடன்படிக்கையின் தமது தரப்பு விதிமுறைகளை காப்பாற்றுபவர்களாயின், அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் உடன்படிக்கைகளையும் முஸ்லிம்கள் கண்டிப்பாக நிறைவேற்றியாக வேண்டும் என திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது. இது இறையச்சத்தின் முக்கியத் தேவை என்றும் இறையச்சமுடையவர்களை, தான் நேசிப்பதாகவும் அல்லாஹ் கூறுகிறான்.

5 –வது அதிகாரம் 9 –வது வசனத்தில் போர்க் காலத்திலும் கூட நியாயத்துடனும் முழுமையான நீதியுடனும் எப்போதும் நடந்து கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் முஸ்லிம்களை அறிவுறுத்துகின்றான். ஒரு தேசம் அல்லது மக்களுடன் உள்ள பகைமை முஸ்லிம்களை ஒருபோதும் அநீதியுடன் நடந்து கொள்ளுமாறு செய்யக் கூடாது என அல்லாஹ் கூறுகிறான். ஏனெனில் இது இறையச்சத்திற்கு மாற்றமான செயலாகும்.

அதிகாரம் 8 வசனம் 68 –ல் போர் நடவடிக்கையாக மட்டுமேயன்றி மற்ற காரணங்களுக்காக பிணைக்கைதிகளைப் பிடித்து வைத்திருப்பது ஒரு தூதருக்கு உகந்ததன்று. ஏனெனில், அவ்வாறு செய்வது இறை அன்பை விட அவர்கள் செல்வத்திற்கும் அதிகாரத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பதாகவே கருதப்படும் என்று அல்லாஹ் கூறுகிறான். எனவே, போர் சமயங்களைத் தவிர எவரையும் பிணைக் கைதியாகப் பிடிப்பது தடுக்கப்பட்டுள்ளதை இது மிகவும் தெளிவாக நிரூபிக்கின்றது. இருப்பினும், பெயரளவில் இஸ்லாமியர்கள் என்று தம்மை அழைப்பவர்கள் பலவந்தமாக எண்ணற்ற அப்பாவி மக்களை சிறைப்பிடித்துக் கொண்டிருப்பதை இன்று நாம் காண்கிறோம். தற்காத்துக் கொள்ள இயலாத பெண்களோ வைப்பாட்டிகளாக ஆக்கப்படுகின்றனர்.

திருக்குர்ஆன் அதிகாரம் 47 வசனம் 5 –ல், போர் முடிவுக்கு வந்து விட்டால் போர்க் கைதிகள் சுதந்திரமாக விடுவிக்கப்பட வேண்டும் என்று எல்லாம் வல்ல அல்லாஹ் கூறியுள்ளான். தகுந்த ஈட்டுத் தொகைகளைப் பெற்றுக் கொண்டு அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது ஓர் அனுகூலம் மற்றும் இரக்கத்தின் வெளிப்பாட்டின் காரணமாக அவர்களை விடுவிப்பது இன்னமும் சிறந்தது என்று இவ்வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். இவ்வாறு போர் முடிந்தவுடன் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். இது ஆண்கள், பெண்கள் என இருவருக்கும் பொருந்தும். ஆரம்ப காலக்கட்டங்களில் போரிடும் ஆண்களுக்கு உதவி செய்யவும் உற்சாகப்படுத்தவும் பெண்கள் போர்க் களங்கள் செல்வதை வழக்கமாக் கொண்டிருந்தனர். அப்போது பெண்களும் கூட கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். எவ்வாறிருப்பினும் திருக்குர்அன் ஆணித்தரமாக தெளிவுபடுத்தும் விஷயம் என்னவெனில், பெண்களை கொடூரமாக நடத்தவோ அல்லது மானபங்கப்படுத்தவோ கூடாது என்பதாகும்.

பிணைக் கைதியை விடுவிப்பதற்கு பிணையத்தொகை செலுத்துதல் தொடர்பாக அதிகாரம் 24 வசனம் 34 –ல் திருக்குர்ஆன் கூறுவது என்னவென்றால், ஒருவரால் போதிய தொகை செலுத்தி கைதியை விடுவிக்க இயலவில்லையென்றால் தவணை முறையில் அதனை ஏற்றுக் கொண்டு அந்த நபரை விடுவிக்க வேண்டும் என்பதாகும். போர்க் கைதிகள் தொடர்பான இவ்வசனங்களை ஆரம்ப கால போர்களின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு புரிந்து கொள்ள வேண்டும். அந்நாட்களில் தனிப்பட்ட நபர்கள் தமது சொந்த செலவில் ஆயுத ஏற்பாடுகளைச் செய்து போரிட்டு வந்தனர். எனவே, அத்தகையோர் அதற்குப் பதிலாக தமது போர்க் கைதிகளை விடுவிக்க பணத்தைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இன்றைய போர்களில் அரசு செலவில் அனைத்துப் போர் நடவடிக்கைகளும் செய்யப்படுவதால், போர் வீரர்களின் தரப்பிலிருந்து செலவுகள் ஏதுமில்லை.

எனவே, போர்க் கைதிகளுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அரசுகள் அல்லது உலகளாவிய அமைப்புகள் முடிவு செய்ய வேண்டுமேயொழிய, தனிப்பட்ட வீரர்கள் அல்ல. நிரந்தர அமைதியைக் கொண்டு வரும் முயற்சியின் பலனாக, போர்க் கைதிகளை பரிமாற்றம் செய்யும் நிகழ்ச்சிகளோ அல்லது வேறு ஒப்பந்தங்களோ அரசு மட்டத்தில் நடக்கலாம். நிச்சயமாக, எவரையும் தனிப்பட்ட காரணத்திற்காக சிறைப்பிடித்து வைக்கும் சூழ்நிலைகள் தற்போது இல்லை. எனவே, இவ்வாறு செய்வது இஸ்லாத்திற்கு முற்றிலும் எதிரானதாகும்.

நீங்கள் மற்றவர்களின் செல்வங்களைப் பொறாமைக் கண் கொண்டு பார்க்கக் கூடாது என்று அல்லாஹ் திருமறையில் கூறியுள்ளான். உலகின் அமைதிக்கு இது ஒன்றே பொன்னான தத்துவமாக இருக்கிறது. இஸ்லாத்தின் இந்த ஒரு கட்டளை பின்பற்றப்பட்டால், ஒரு முஸ்லிமுக்கு மற்றவர்களின் நிலத்தை, இடத்தை அல்லது செல்வத்தை அபகரிக்கும் எண்ணம் ஒருபோதும் தோன்றாது. திருக்குர்ஆனில் அதிகாரம் 10 வசனம் 100 –ல் அல்லாஹ் கூறுவதாவது, அவன் எல்லாவற்றின் மீதும் பேராற்றல் உடையவன். அவன் விரும்பி இருந்தால் முழு உலகையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி அவன் செய்திருப்பான். இருப்பினும், அல்லாஹ் மனித இனத்தை கட்டாயப்படுத்த வில்லை. மேலும், இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரப்புவதற்கு பலவந்தத்தை பிரயோகப்படுத்தக் கூடாது என்றும், மார்க்கம் என்பது தனி நபரின் மனசாட்சியையும் உள்ளத்தையும் பொறுத்தது என்றும் அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளான்.

எனவே, இஸ்லாத்தையோ வேறெந்த மார்க்கத்தையோ ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்துவது எத்தகைய சூழ்நிலையிலும் ஒருபோதும் அனுமதிக்கப்பட்டதல்ல என்பது தெள்ளத் தெளிவாகிறது. இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் போதிக்குமாறு முஸ்லிம்கள் கூறப்பட்டுள்ளது உண்மைதான். எனினும், அதனைத் தெரிவிப்பது மட்டுமே கடமையாகும். எனவே, அதிகாரம் 18 வசனம் 30 –ல் அவர்களுடைய இறைவனிடமிருந்து உண்மை வந்து விட்டது. இதுவே, வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாக இருக்கின்றது. அவர்கள் ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் அவர்களுடைய சுதந்திரமாகும் என்று அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை நோக்கிக் கூறியுள்ளான். இவ்வார்த்தைகள், அனைவரும் பார்த்து கேட்டு உணரும் வகையில் தெள்ளத் தெளிவாக உள்ளது. அனைத்து மக்களும் நம்பிக்கை கொள்வதற்கும், நம்பிக்கை கொள்ளாதிருப்பதற்கும் சுதந்திரம் பெற்றவர்கள். எனவே, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதுச்

செய்தியை தெரியப்படுத்துவதைத் தவிர்த்து வேறெதுவும் செய்ய வேண்டாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், இன்று இந்தப் பெயர் தாங்கிய முஸ்லிம் தலைவர்கள் இதையும் தாண்டி எவ்வாறு செல்ல முடியும்? அவர்கள் இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களை விட அதிகமாக ஆற்றலும் அதிகாரமும் உரிமைகளும் தமக்கு இருப்பதாக நினைக்கின்றார்களா?

எனவே, திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்களின் அடிப்படையில், இஸ்லாத்தின் போதனைகளின் இரத்தின சுருக்கத்தை எடுத்து வைத்துள்ளேன். அவை, சில குறிப்பிட்ட முஸ்லிம் குழுவினராலும், நாடுகளாலும் கூட இழைக்கப்படும் கொடூரமான செயல்கள் அனைத்தும் இஸ்லாத்திற்கு முற்றிலும் முரண்பட்டவை என்பதை நிரூபிக்கின்றன.

இவை இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிரானவையென்றால், இவர்கள் ஏன் இவ்வாறு செயல்படுகின்றனர் என்று நீங்கள் வியப்படையலாம். அதற்கான எளிய பதில், நான் முன்னரே கூறியது போன்று, அவர்கள் தமது உலக ஆதாயங்களை நிறைவேற்றிக் கொள்ள விரும்புகின்றனர். அவர்களது இலக்கு இம்மியளவும் மார்க்கமோ அல்லது ஆன்மீகமோ அல்ல. அவர்கள் இரத்தம் சிந்துதல் மற்றும் கொடுமையிழைத்தல் மூலம், மார்க்கத்தின் பெயரால் உலகத் தேவைகளை அடைய வழிதேடுகின்றனர்.

தமது தூய மார்க்கம் களங்கப்படுவதையும் அநியாயமான முறையில் சுயநலத்திற்காக அது பயன்படுத்தப்படுவதையும் எண்ணி ஒவ்வோர் அஹ்மதியும், அமைதியை விரும்புகின்ற ஒவ்வொரு முஸ்லிமும் மிகுந்த வேதனையடைகின்றார் என்பதை நான் மீண்டும் கூறிக் கொள்கிறேன். அதே சமயம், பயங்கரவாத அமைப்பினரின் அக்கிரமச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு, இஸ்லாம் ஒரு வன்முறையின் மார்க்கமாகும் என்று வாதிக்கும் மக்களையும் அமைப்புகளையும் அரசியல்வாதிகளையும் அவர்கள் இவ்வாறு கூறுவது சரிதானா என்ற வினாவையும் எழுப்ப விரும்புகிறேன்.

இத்தகைய தீவிரவாத அமைப்புகளால், அவர்களது பயங்கரவாத செயல்பாடுகளையும், போர்களையும் நீண்ட நாட்கள் வரை தொடரும் வகையில், அதிக நிதியுதவியை எவ்வாறு திரட்டிக் கொள்ள முடிகிறது என்று சிந்தித்துப் பார்க்குமாறும் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் நவீன போர் ஆயுதங்களை எவ்வாறு பெறுகின்றனர்? அவர்களிடம் ஆயுத உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளோ அல்லது தொழில் மனைகளோ இருக்கவா செய்கின்றன? அவர்கள் சில குறிப்பிட்ட வல்லரசுகளிடமிருந்து உதவி மற்றும் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டிருக்கின்றனர் என்பதுதான் மிகவும் வெளிப்படையாகும். இது, எண்ணெய் வளங்கள் மிகுதியாக உள்ள முஸ்லிம்

நாடுகளிலிருந்து பெறும் நேரடி ஒத்துழைப்பாக இருக்கலாம் அல்லது பிற வல்லரசுகள் மறைமுகமாக இவர்களுக்கு உதவிகளை வழங்கலாம்.

ISIS முதன்முதலில் தலைகாட்டத் தொடங்கியபோது, அவர்கள் அந்நாட்டு இராணுவத்தின் போர் ஆயுதங்களை எடுத்துக் கொண்டும், சில ஆயுதங்களை கிடங்கிலிருந்து கைப்பற்றிக் கொண்டும் விட்டனர் என்று கூறப்பட்டது. இது உண்மையாக இருக்கலாம். எனினும், இவ்வமைப்பு இப்போது வரை தமது செயல்பாடுகளை தொடர்ந்து நடத்த அவை போதுமானதாக இருக்க முடியாது. ஆயுதங்களை விநியோகம் செய்வது நிறுத்தப்படுமே யானால், அவர்களால் ஒருபோதும் தமது செயல்பாட்டை தொடர முடியாது. ஆனால் ISIS –க்கு ஆயுதங்கள் விநியோகம் செய்யப்படுவது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்வதாகத் தெரிகிறது.

இப்போதும், அவர்கள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும், அதிநவீன ஆயுதங்களையும் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவை அனைத்தும் ISIS –க்கு ஆதரவாக ஆயுத விநியோகம் நடப்பதை சுட்டிக் காட்டுகிறது. அவர்களிடம் கோடிக்கணக்கில் பெருந்தொகை இருந்து வருவது பொது அறிவாக அனைவரும் அறிந்த விஷயமாகும். எனவே, அவர்களுக்கு வெளியுதவி இருந்து வருவதாக யூகிக்க முடிகிறது. அநேக அதிகாரிகளும், நிபுணர்களும், விமர்சகர்களும் இக்கருத்திற்கு வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். உதாரணமாக, அமெரிக்க அரசின் பொருளாதார மற்றும் தீவிரவாத புலனாய்வுப் பிரிவின் செயலாளர் டேவிட் கோஹன், ISIS அமைப்பானது, ‘நாம் இதுவரை எதிர்கொண்டதில் மிக அதிகமாக நிதியுதவி செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பாக இருக்கின்றது’ என்று வெளிப்படை யாகவே கூறியுள்ளார். அவர்கள் மில்லியன் டாலர்கள் ஒவ்வொரு மாதமும் செலவு செய்வதாகவும், கள்ளச் சந்தையில் எண்ணெய் விற்பனை செய்வதன் மூலமாக, நாளொன்றுக்கு ஒரு மில்லியன் டாலர் வரவுக்கான ஏற்பாடு செய்து கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வளவு அதிக அளவுள்ள எண்ணெய் தங்கு தடையின்றி எங்கிருந்து எவ்வாறு அவர்கள் பெறுகின்றனர் என்று நாம் கேட்க வேண்டும். உலகில் மற்ற பகுதிகளில் எண்ணெய் எடுத்துச் செல்வதும் விற்பனையும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. மேலும் எண்ணெய் வளம் அதிகமுள்ள நாடுகளுக்கெதிராக தடைகள் விதிக்கப்படுகிறது. அவ்வளவு அதிக கொள்ளளவுள்ள எண்ணெய்யைக் கொண்டு செல்வதையும் விற்பதையும் சுலபமாக மறைத்து விட முடியாது என்ற போதிலும், இவ்வனைத்து விதிமுறை

களையும் தவிர்த்து ISIS –ஆல் எவ்வித தடங்களுமின்றி மிக அதிக அளவில் எண்ணெய் வாங்கவும் விற்கவும் முடிகிறது.

பிணையத் தொகை மூலமாக வழக்கமான வருமானத்தை ISIS பெற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால், இதற்கு வருகின்ற மற்ற வருமானத்தை ஒப்பிடும்போது இது மிகவும் குறைவேயாகும்.

இந்த அமைப்புகளின் நிதியுதவி, பெரும் பிரச்சனையாகவே இருந்து வருகிறது. ஏனென்றால், இந்த நிதியுதவிகள் மூலமாக, அவர்கள் மற்ற பிரிவினர்களையும் தனிப்பட்ட நபர்களையும் தமக்கு இரையாக்கிக் கொள்கின்றனர். உதாரணமாக, சமீப கால அறிக்கை கூறுவது என்னவென்றால், ஒரு குடும்பம் தனது ஓர் உறுப்பினரை ISIS –ல் இணைய அனுப்புகிறதென்றால், அந்த குடும்பத்திற்கு முதலாவதாக ஒரு கணிசமான தொகையாக பல ஆயிரம் டாலர்கள் கொடுக்கப்படுகிறது. பின்னர், நூற்றுக்கணக்கான டாலர்கள் தொடர்ச்சியாக அனுப்பப்படுகிறது.

எனவே, இத்தகைய அமைப்புகளுக்கு நிதியுதவி செய்யப்படுவதை நிறுத்துவதற்கு ஏதாவதொன்றை அவசரமாக செய்தாக வேண்டும். மேற்கத்திய நாடுகள் நேரடியாக தம்மையும் தாக்கும் போர் இதுவென்று, இப்போது உணரவும் அதற்கேற்ப நடந்து கொள்ளவும் ஆரம்பித்துள்ளன. எனினும், இது குறைத்து மதிப்பிடுதலேயாகும். உண்மை என்னவெனில், இந்தப் போரானது முழு உலகத்திற்கும் எதிரான போராகும்.

வல்லரசுகள் பல்வேறு விஷயங்களுக்காக முஸ்லிம் நாடுகளின் மீது தமது ஆதிக்கத்தை அதிகமாக நிலைநாட்டுவதையும், கொள்கைகளை திணிப்பதையும் வழக்கமான நடைமுறையாக நாம் பார்க்கிறோம். எனவே கேள்வி என்னவெனில், எங்கு உண்மையாகவே ஆதிக்கம் தேவைப்படுகிறதோ அங்கு ஏன் தமது ஆதிக்கத்தை இவ்வலரசுகள் பயன்படுத்தவில்லை என்பதாகும்.

பயங்கரவாதத்தின் அனைத்து வடிவையும் சமாளிக்கக் கூடிய கூட்டு முயற்சியுடன் கூடிய, இணைந்த செயல்பாடுகள் ஏன் எடுக்கப்படவில்லை? இந்த அமைப்பினர் ஏற்படுத்தும் அழிவுடன் ஒப்பிடுகையில், எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கின்றன. எனது பார்வையில் இப்போது நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளுக்குக் காரணம் முஸ்லிம் உலகு மட்டுமல்ல. மாறாக, வெளியிலிருந்து பங்களிப்பை வழங்கக் கூடிய மாபெரும் ஆற்றல்களும் சக்திகளும் இந்த அழிவை உண்டாக்கும் காரணிகளுக்குப் பின்னால் இருக்கின்றன.

சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் உள்நாட்டுச் சண்டைகள் பல ஆண்டு காலமாக நடந்து வருகின்றன. வெளியிலிருந்து கிளர்ச்சியாளர்களுக்கும் பிரிவினைவாதிகளுக்கும் நிதியுதவி மற்றும் ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் அதி வேகமாக வளர்ந்து, இவர்களுக்கு பண உதவி செய்பவர்களும் கூட இவர்களை கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு சென்று விட்டனர். இவர்கள் நாசத்தை விளைவிக்கின்றனர். இவர்கள் பயங்கரவாத கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தீவிரவாத செயல்களின் அனைத்து வகைகளையும் அரங்கேற்றுகின்றனர். இதை குறிப்பிடுவதன் மூலம், ஊடகங்களில் வெளியிடப்படாத ஒன்றையோ அல்லது பொதுமக்களிடையே ஏற்கனவே கொண்டு வரப்படாத விஷயத்தையோ நான் கூறவில்லை. ISIS போன்ற தீவிரவாத அமைப்புகள் இப்படிப்பட்ட கொள்கைகளின் வழியில் வந்த ஓர் அமைப்பாகும். இப்போது அவர்கள் தமது தீவிரவாத அமைப்பை உலகம் நெடுகிலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அனைத்து திசைகளிலும் பரப்பி வருகின்றனர்.

இத்தகைய தீய செயல்பாடுகள் அனைத்தும் இஸ்லாத்துடன் இணைத்துக் கூறப்படுவதால், இது எனக்கும் மிகுந்த வேதனையையும் கவலையையும் அளிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதை மீண்டும் நான் கூறிக் கொள்கிறேன். இப்பொழுதெல்லாம் இளைஞர்களை தீவிரவாதிகளாக்கும் நாடுகளான சிரியா, ஈரான் போன்ற நாடுகளுக்கு, மேற்கத்திய நாடுகளிலிருந்து இளைஞர்கள் செல்வது பெரும் கவலைக்குரிய விஷயமாக இருக்கிறது. அவர்கள் இறுதியாக தமது சொந்த நாடுகளுக்கு திரும்பியதும் அங்கு தாக்குதல்கள் நடத்தவும் உலகின் இந்த பகுதியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தவும் அதிக சாத்தியங்கள் இருக்கின்றன. எனவே, இது ஓர் உள்ளூர் அல்லது ஒரு முஸ்லிம் சம்பந்தப்பட்ட பிரச்சனையல்ல. இது உலகளாவிய பிரச்சனையாகும். இத்தகைய பயங்கரவாத அமைப்புகளின் செயலை நிறுத்துவதற்கு உலகம் தழுவிய கூட்டு முயற்சி தேவைப்படுகிறது. பயங்கரவாதத்துடனான இந்தப் போர் முடிவு பெறுவதற்கு 30 முதல் 100 வருடங்கள் ஆகலாம் என சில பிரபலமானவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். தனிப்பட்ட முறையில் எனது நம்பிக்கை என்னவெனில், இவர்களை வேரோடு நீக்குவதற்கு உலகம் உறுதி பூண்டால், இந்த தீவிரவாத மற்றும் பயங்கரவாத பிரிவுகளை மிகக் குறுகிய காலத்திலேயே நிறுத்தி விடலாம். இந்தப் போரை நிறுத்துவதற்கு பல ஆண்டுகள் ஆகும் எனக் கூறுவதன் மூலம், நமது பொறுப்பிலிருந்து நம்மை விடுபட்டவர்களாக நாம் நினைத்து விடக் கூடாது. மாறாக, உலகளாவிய பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் முயற்சியில் ஒவ்வொருவரும் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். எனவே,

குற்றச்சாட்டை இஸ்லாத்தின் காலடியில் அல்லது குறிப்பிட்ட அமைப்பின் மீதுபோட்டு விடுவது போரிலிருந்து நம்மை பாதுகாத்து விடாது. அல்லது நமது பொறுப்பிலிருந்து நம்மை விடுவித்து விடாது.

எனவே, அமைதியை விரும்பும் அனைத்து மக்களும் தத்தமது அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அனைத்து அரசியல் பிரமுகர்களும், செல்வாக்கு மிக்கவர்களும், இதன்பால் தமது கவனத்தை செலுத்த வேண்டும். மேலும் தத்தமது செல்வாக்கு வட்டத்திற்குள் உண்மையான நீதியை நிலைநாட்டுவதன் மூலம் உலகில் அமைதியை உருவாக்கப் பாடுபட வேண்டும். உலக அமைதிக்கு அழிவை ஏற்படுத்தும் விஷயங்களிலிருந்து தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாம் உலகை காப்பாற்ற விரும்பினால், உண்மையான நீதி, சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் வெளிப்பட வேண்டும். ஒவ்வொரு நாடும் எதிர் கொண்டுள்ள பிரச்சனைகளுக்கும், ஏமாற்றத்தை தவிர்க்கின்ற வகையில் நியாயமான முறையில் தீர்வு காணப்பட வேண்டும்.

எந்த தேசத்தின் செல்வமும் பொறாமைக் கண் கொண்டு உற்று நோக்கப்படக் கூடாது. ஒருவருக்கொருவர் உதவும் வகையில், பரஸ்பர கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். மிகவும் முக்கியமாக உலகம் தம்மைப் படைத்த இறைவனை மறந்து விட்டது என்பதை உணர்ந்து, மக்கள் அவன் பக்கம் திரும்ப வேண்டும். அப்போது மட்டும்தான் உண்மையான அமைதியை நிலைநாட்ட முடியும். இல்லையெனில் அமைதிக்கு எவ்வித உத்திரவாதமும் இருக்க முடியாது.

மற்றோர் உலகப் போரின் பயங்கரமான விளைவுகள் குறித்து நான் முன்னரும் பல தடவை பேசியிருக்கிறேன். ஒருவேளை, அத்தகைய உலகப் போருக்குப் பிறகுதான், சுய ஆதாயங்களையும், பேராசைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட, நியாயமற்ற கொள்கைகளின் நாச விளைவை உலகம் உணர்ந்து கொள்ள முன்வரும். அத்தகைய பேரழிவு வந்து கடந்து செல்லும் முன்பாக, உலகம் தமது உணர்வை வெளிப்படுத்தும் என்று நான் நம்புவதோடு, பிரார்த்தனையும் செய்கிறேன். மேலும் உலகம் தன்னைப் படைத்தவனை உணர்ந்து ஏற்றுக் கொள்ள முன்வரும் என்றும் நான் நம்புகிறேன். பிரார்த்தனையும் செய்கிறேன். இத்தகைய வார்த்தைகளுடன், உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் நன்றி!

TAMIL

# இஸ்லாம் ஓர் அமைதியின் மார்க்கம்

நன்றியுடைமை

சுதந்திரம்

அமைதி

கண்ணியம்

சமத்துவம்


**Contact Details:**
Ahmadiyya Muslim Jama'at, India

**Head Office:**
Qadian, Dist. Gurdaspur, Punjab - 143 516.
**www.alislam.org / www.ahmadiyyamuslimjamaat.in**

**Branch Office:**

**Masjid Nasir**
Ashura East Street
Melapalayam - 627 005

**Masjid Mahmood**
11, U.I. Colony, First Main Road
Chennai - 600 024

**Masjidul Mahdi**
Kuniamuthoor
Coimbatore - 641 008

Feedback **www.ahmadiyyamuslimjamaat.in / feedback**
National Toll Free No. 1800 103 2131 (9.00 am to 10.30 pm) Tamil : 1800 425 40000



**MUSLIM TELEVISION AHMADIYYA INTERNATIONAL**
**www.mta.tv**
Satellite: Asia sat 7s, Degree: 105.5 East, Frequency 3760 Symbol Rate; 26000 FEC: Auto C.Band 4 Feet Dis Antenna
EutelsatE70B, Degree:70O East, Frequency:11211, Symbol Rate: 5111, Polarization-HorizantalQPSK-1/2, KU Band 2 Feet Dis Antenna